செ.வெ.எண்:30 நாள்:24.6.2015

**சிறுபான்மையின மாணவ /மாணவியர்களுக்கு 2015-2016ஆம் ஆண்டிற்கு பள்ளி மேற்படிப்பு (Post Matric Scholarship) கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன – மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் 11, 12, ஐ.டி.ஐ., ஐடிசி, பாலிடெக்னிக், பட்டயப்பபடிப்புகள், இளங்கலை (ம) முதுகலை பட்டப்படிப்புகள் எம்.பில், ஆராய்ச்சி படிப்பு ஆகியவற்றை பயிலும் கிறித்துவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதத்தை சார்ந்த மாணவ/மாணவியர்கள் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை (Post Matric scholarship) திட்டத்தின்கீழ் 2015-16ஆம் ஆண்டில் புதிய இணையதள முகவரியான www.scholarships.gov.in –ல் ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கான காலவரம்பு புதிய இனங்களுக்கு 15.09.2015 மற்றும் புதுப்பித்தல் இனங்களுக்கு 10.10.2015 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு மொத்தம் 18989 மாணவர்களுக்கு புதிய கல்வி உதவித்தொகை மைய அரசால் 2015-16ம் ஆண்டிற்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கல்வி உதவித்தொகை பெற மாணவ/மாணவியர்கள் கடந்த ஆண்டு பொது தேர்வில் குறைந்த பட்சம் 50 சதவீதம் மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும், பெற்றோர் /பாதுகாவலர் ஆண்டு வருமானம் அனைத்து வகையிலும் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

மேலும் www.scholarships.gov.in என்ற புதிய இணையதள முகவரியில் ஆன்லைன் (online) மூலம் விண்ணப்பித்து இணைப்புகளை அப்லோடு(upload) செய்து மாணவ/மாணவியர்கள் பதிவு செய்யப்பட்ட அவ்விண்ணப்பத்தை படியிறக்கம் செய்து கையொப்பமிட்டு, அத்துடன் மதிப்பெண் சான்றிதழ், மதத்திற்கான சான்று, வருவாய்த்துறையிடமிருந்து பெற்ற வருமானச்சான்றிதழ் ஆகியவற்றின் நகலுடன் கல்விக்கட்டணம் செலுத்திய ரசீது, இருப்பிட முகவரி, வங்கி கணக்கு எண் (Core Bank Service Account Number, IFS Code) ஆகிய விவரங்களுக்கான ஆவணங்களை இணைத்து அவர்கள் பயிலும் கல்வி

நிலையங்களில் 15.09.2015-க்குள் புதியதிற்கும் 10.10.2015க்குள் புதுப்பித்தலுக்கும் சமா்பிக்க வேண்டும்.

ஒப்பளிக்கப்படும் கல்வி உதவித்தொகைகள் மாணவ/மாணவியா்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படவுள்ளதால் சரியான வங்கி கணக்கு எண் மற்றும் வங்கி குறியீடு எண் (IFS Code) விவரங்களை சமா்பிக்க வேண்டும். வங்கி விவரங்களை தவறாக அளிக்கும் பட்சத்தில் மாணவ/மாணவியரின் கல்வி உதவித்தொகை நிராகரிக்கப்படும்.

மேற்படி ஆன்லைன் மூலம் மாணவ/மாணவியா்களால் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை கல்வி நிலையங்கள் அவ்வப்போது பரிசீலித்து தகுதிபெற்ற விண்ணப்பங்களை 05.10.2015-க்குள் புதியதிற்கும் 31.10.2015க்குள் புதுப்பித்தலுக்கும் ஆன்லைன் மூலம் அனுப்ப வேண்டும்.

திருவாரூா் மாவட்டத்தில் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ/மாணவியா்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரிய காலத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவா் முனைவா் மா.மதிவாணன் இ.ஆ.ப., அவா்கள் தெரிவித்துள்ளாா்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடா்பு அலுவலா் திருவாரூா்**